ஸ்ரீ துர்கா ஸப்தஸ்லோகி
ஸித்த குஞ்சிகா ஸ்தோத்ரம்
தேவி அபராத க்ஷமாபனம்

உரையாசிரியர் : Prof. C.G. வாசுதேவன்



செல்வமும் ஞானமும் நாம் பெறலாம்

CHENGACHERIAL PUBLISHERS
செங்கச்சேரியாள் பதிப்பகம்
சென்னை

செங்கச்சேரியாள்
வெளியீடு -5

செங்கச்சேரியாள் பதிப்பகம்
17, L & T காலனி முதல் ஃபேஸ்,
சி.ஆர். இராமகிருஷ்ணன்புரம்,
சென்னை - 600 092.
போன் : 427008, 4830913

ஸ்ரீ துர்கா ஸப்தஸ்லோகி
ஸித்த குஞ்சிகா ஸ்தோத்ரம்
தேவி அபராத க்ஷமாபனம்

உரையாசிரியர் : Prof. C.G. வாசுதேவன்



செல்வமும் ஞானமும் நாம் பெறலாம்

செங்கச்சேரியாள்
வெளியீடு -5

CHENGACHERIAL PUBLISHERS
செங்கச்சேரியாள் பதிப்பகம்

செங்கச்சேரியாள் பதிப்பகம்
17, L & T காலனி முதல் ஃபேஸ்,
சி.ஆர். இராமகிருஷ்ணன்புரம்,
சென்னை - 600 092.
போன் : 427008, 4830913

முதற்பதிப்பு : அக்டோபர் 1994

பதிப்புரிமை : செங்கச்சேரியாள் பதிப்பகம், சென்னை

விலை : ரூ.5-00

PRINTED AT EMERALD ACADEMIC PRESS, MADRAS-29

3-4

முகவுரை

புராணங்கள் இந்து மதத்தின் சாரம். அவைகளை நீக்கிவிட்டால் இந்து மதம் உப்பில்லாத உண்டி போல் ஆகிவிடும். முக்கியமான புராணங்கள் பதினெட்டு. இந்த புராணங்களில் பாகவதத்திற்கு அதிக முக்கியத்துவம் உண்டு. பாகவதம் இரண்டு வகைப்படும். ஒன்று விஷ்ணு பாகவதம். அது மகா விஷ்ணுவின் அவதாரங்களையும், லீலைகளையும் எடுத்துரைக்கிறது. மற்றொன்று தேவீ பாகவதம். இது அம்பாளின் பரதத்துவத்தையும், மகா சக்தியையும் கூறுகிறது. விஷ்ணு பாகவதத்தில் முக்கிய பாத்திரம் நாராயணன். தேவீ பாகவதத்தில் முக்கிய அம்சம் நாராயணி, அல்லது பகவதி அல்லது வைஷ்ணவி என்று கூறலாம். விஷ்ணு பாகவதத்திற்கு எவ்வளவு பெருமை உள்ளதோ அவ்வளவு பெருமை தேவீ பாகவதத்திற்கும் உண்டு.

வேதத்தில் நாராயணியை 'வித்யா' எனவும், 'ஆத்யா சக்தி' எனவும், பிறவித்தளையைச் சேதிப்பதில் திறமை மிக்கவள் எனவும், இந்த படைப்பில் இருக்கும் அனைத்துயிர்களிலும் உறைபவள் எனவும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த தேவீ பாகவதத்தின் சிறப்பு என்னவென்றால் அதில் ஸப்த சதீ அடங்கியுள்ளது. கிரதுக்களில் எப்படி அசுவமேதமோ, தேவர்களில் எப்படி ஹரியோ, அப்படியே ஸ்துதிகளில் ஸப்தசதீ. வேதம் எப்படி அனாதியோ அப்படியே ஸப்த சதீ என்று புவனேசுவரி ஸம்ஹிதை கூறுகிறது. **இந்த ஸப்த சதியின் சுருக்கமே "ஸப்த ஸ்லோகீ".** பக்தி ச்ரத்தையுடனும், தூய்மை நிறைந்த உள்ளத்துடனும், உலகத்தின் நன்மையை நினைத்து ஆசாரத்துடனும் அர்த்தத்துடனும் இதை பாராயணம் செய்தால், கஷ்டங்கள் நீங்கும். மனம் அமைதி பெறும், உள்ளம் ஒளிமயமாகும், புத்தி கூர்மை அடையும், வாழ்க்கை செம்மை

அடையும், இப்பிறவி நற்கதி பெறும். ஸப்த ஸ்லோகி நாராயணியின் முழுத்தோற்றமாகும். எப்படி பிரம்ம வித்தையை 'ஓம்' என்று குறிப்பிடுகிறோமோ அப்படியே "ஹ்ரீம்" பீஜ மந்திரத்திலும் பிரம்ம வித்தை அடங்கியுள்ளது. "ஹ்ரீம்" தேவியைக் குறிப்பிடும். இது மாயா பீஜம் அல்லது புவனேஸ்வரி பீஜம் எனப்படும். இந்த பீஜத்திலிருந்தே மஹா காளி, மஹா லக்ஷ்மி, மஹா சரஸ்வதி தோன்றுகின்றனர். ஆதலால் நாராயணி இம்மூன்று தேவிகளையும் படைத்தவள். தேவியின் சக்தி இம்மூன்று சக்திக் கூட்டங்களின் சக்தியைவிட பன்மடங்கு. இந்த ஸப்த ஸ்லோகி பாராயணம் செய்பவர்கள் நவாக்ஷரி மந்திர ஜபத்தை எடுத்துக் கொண்டால் சிறப்படைவார்கள். சகல சௌபாக்கியங்களைப் பெறுவதற்கும், எல்லா உபத்திரங் களிலிருந்து விடுபடுவதற்கும் இந்த பாராயணம் சிறந்தது.

குஞ்சிகாஸ்தோத்ர மஹிமை

சண்டி ஜபம் ஸித்தி பெறவேண்டுமென்றால் ஸித்த குஞ்சிகா ஸ்தோத்ரம் தேவை, இதற்கு கவசமோ, அர்கலா ஸ்தோத்ரமோ, கீலக ஸ்தோத்ரமோ கிடையாது. ரஹஸ்ய முறைகள் இல்லை. இதில் துதிக்கக்கூடிய ஸூக்தங்கள் கிடையாது, த்யான முறைகளுமில்லை. இதில் அங்கந்யாஸமோ, கரந்யாஸமோ, அர்ச்சனையோ இல்லை. இதைப் படித்த மாத்ரத்திலேயே, துர்கா ஸப்த ஸதி வழிபட்ட பலன் கிடைக்கும். தேவர்களுக்கும் கிடைக்காத மேன்மை இதை ஜபித்தால் கிடைக்கும். பிறர் வசத்திலிருந்து விடுபடவும், மாயையில் அகப்பட்டு கொள்ளா மலிருப்பதற்கும், மரண பயத்திலிருந்து விடுபடுவதற்கும் இந்த ஸ்தோத்ரம் உதவும். துர்கா என்றால் எளிதில் கடக்கமுடியாதது. குஞ்சிகா என்றால் எளிதில் திறக்கக்கூடிய சாவி. கஷ்டங்களை எளிதில் கடக்க காரணமாக இருக்கும்.

மனிதனின் இயல்பு நற்கர்மத்தின் பயனை நற்கர்மா செய்யாமலேயே அடைய விரும்புவது. ஆனால் இது சாத்யமில்லை. எப்படி தண்ணீர் வேண்டுமென்றால் கிணறு வெட்ட வேண்டுமோ, அப்படியே கர்மாவை நலம்படச்

3-4

செய்தால்தான் நற்பலனை அடைய முடியும். நம் வாழ்க்கையில் எத்தனையோ தவறுகளையும், அபச்சாரங்களையும், பாவங்களையும், நம்மை அறிந்தோ, அறியாமலோ, தெரிந்தோ, தெரியாமலோ, செய்து விடுகிறோம். அச்செயல்களின் பிரதி விளைவை நீக்க பிரயாசைப்படுகிறோம். எதாவது ஒரு பிரார்த்தனையோ அல்லது ஒரு வேள்வியோ, அல்லது ஒரு மந்திரமோ, அதைச் செய்யவேண்டுமென்று தோன்றினால் உடனே அதை எடுத்துக் கொண்டுவிடுகிறோம், ஆனால் அந்த பிரார்த்தனையையோ, மந்திரத்தையோ அல்லது அந்த வேள்வியையோ சரிவர ஆசாரத்துடனும், அக்கரையுடனு;ம், மனத்தூய்மையுடன் செய்ய முயல்வதில்லை. அவற்றை ஏனோ தானோ என்று செய்யத்தான் தோன்றுகிறது. ஆதலால் நாம் அந்த பிரார்த்தனையின் பலனையோ, அல்லது அந்த மந்திரத்தின் பலனையோ சரிவர அடைவதில்லை. தவறு செய்தால் மன்னிப்பு கேட்க வேண்டும். மன்னிப்பு மனதார கேட்க வேண்டும். உள்ளம் கனிந்து, உருகி மன்னிப்பு கேட்க வேண்டும். அப்பொழுதுதான் பாபம் நீங்கும், புண்யம் கிட்டும். தேவியின் மன்னிப்பு பெற **தேவி அபராத க்ஷமாபன ஸ்தோத்திரம்** என்று ஒன்று உண்டு. அதை தினந்தோறும் பக்தி ச்ரத்தையுடனும், அர்த்தம் தெரிந்துக் கொண்டும் படிக்க வேண்டும். அப்பொழுது அந்த ஸ்தோத்திரத்தின் பலனை அடையலாம்.

ஆதலால் இந்த சிறு நூலில் ஸப்த ஸ்லோகியுடன் தேவி அபராத க்ஷமாபன ஸ்தோத்திரத்தை விரிவுரையுடன் தமிழில் தந்துள்ளோம். தேவியின் அருளால் இதைப் படித்து, விதிமுறைப்படி ஜபித்து மக்கள் நன்மை பெற வேண்டும் என்பதே எங்கள் பிரார்த்தனை.

ஸப்த ஸ்லோகி

(துர்கா ஸப்த சதியில் அடக்கம்)

ज्ञानिनामपि चेतांसि देवी भगवती हि सा ।
बलादाकृष्य मोहाय महामाया प्रयच्छति ॥ १ ॥

ஜ்ஞாநிநாமபி சேதாம்ஸி தேவீ பகவதீ ஹிஸா
பலாதாக்ருஷ்ய மோஹாய மஹா மாயா ப்ரயச்சதி (1)

ஞானிகளுடைய சித்தங்களையும் அந்த மஹாமாயா வலுவில் கவர்ந்து மோஹத்தில் பலவிதமாக உழலச் செய்கிறாள்.

ஞானிகள் அறிவுமிக்கவர்கள். அவர்களுக்கு நன்மை எது, தீமை எது, உண்மை எது, பொய் எது, நல்லது, கெட்டது போன்றவைகள் நன்றாகத் தெரியும். ஆனாலும் சிலசமயங்களில் மமதையின் வசப்பட்டு மோஹ மடுவில் விழுந்து விடுகிறார்கள். மனிதர்கள் தம் குழந்தைகளுக்கு ஆதரவு காட்டுகிறார்கள். தம் புத்திரர்களிடம் மிகுந்த அபிமானம் உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களின் ஞானம் ஆதரவு தருவதற்குத் தகுந்த வழி முறைகளை வகுக்கிறது. ஆனால் ஆதரவு தரும்பொழுது அவர்கள் தங்கள் மக்கட் பேறுகளிலிருந்து பிரதியுபகாரம் கிடைக்கும் என்று பேராசையில் அல்லவா ஆதரவு புரிகிறார்கள். இதுதான் மாயையின் மோகம். மாயை உண்மையை மறைத்து அதற்கு மாறான மற்றொன்றை தோற்றுவிக்கிறது. அந்த மற்றொன்றின் மேல் பற்று வைத்து செயல்புரிவதே இந்த மோகம். மோகம் மனதை மருளச் செய்கிறது. மாலை நேரங்களில் கயிறைப் பார்த்து பாம்பு என்று பயப்படுகிறோம். இதுதான் மாயை. அந்த மயக்கத்தின் விளைவு மோகம். மோகத்தின் பலன் துக்கம்.

மோகத்தின் விளைவு துன்பம், கோபம், பொறாமை, மதி மயக்கம், அஞ்ஞானம், அறிவின்மை.

படித்து பட்டம் பெற்ற மருத்துவர்கள் போதை கொடுக்கும் பொருள்களின் தீமையை அறிந்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்களில் சிலர் அந்த போதை பொருட்களுக்கு அடிமையாகிறார்களே. இது தான் மாயையின் விளைவு.

விஸ்வாமித்திரர் தம் தவத்தில் சில சமயங்களில் வீழ்ச்சியை அடைந்தார். அதற்கு காரணம் அவரை மாயை தாக்கியதுதான்.

பரதர் பெரிய முனிவராக இருந்தும் மான்குட்டியிடம் ஆதரவு காட்டி அதன்மேல் பற்று வைத்ததனால் தவநிலையிலிருந்து கீழே வந்துவிட்டார். இதுதான் மோகத்தின் விளைவு.

நாம் ஒரு பொருளை பார்க்கும் பொழுதே அதன் மேல் பற்று உண்டாகிறது. பற்றானது காமமாக மாறுகிறது. அதை அடைய வழிமுறைகளையும், முயற்சியையும் செய்கிறோம். முயற்சியை யாராவதோ, ஏதாவது ஒரு பொருளோ எதிர்த்தால் அதன் மேல் கோபம் உண்டாகிறது. கோப வசப்பட்டால் அறிவு மங்கி விடுகிறது. உண்மை நிலையை மறந்து விடுகிறோம். அறிவு மங்கினால் தவறு வந்து விடுகிறது. தவறினால் பாழ் அடைந்து விடுகிறோம். இவ்வாறு ஆகாமலிருப்பதற்கு அறிவு நிரந்தரமாக நம்மில் ஒளி பெற்றுக்கொண்டே இருக்க வேண்டும். அந்த நிரந்தர ஒளி தேவியின் அருளினால்தான் பெற முடியும். ஆதலால்தான் எப்பொழுதும் நாம் வினயத்துடனும், விவேகத்துடனும் செயல் புரியவேண்டும்.

இந்த உலகத்தைக் காக்கும் சக்தி தேவியே. இந்த சம்ஸாரக் கடலில் அனைத்து ஜீவராசிகளையும் சுழலச் செய்கிறாள் மஹா மாயை. இந்த மாயையை கடக்க யாராலும் ஸ்வய முயற்சியால் முடியாது. ஏன் என்றால் இது தெய்வீக மாயை. (தைவீ ஹி ஏஷா மம மாயா துரச்யயா - பகவத் கீதை - IX)

இதைக் கடக்க ஒரே ஒரு வழிதான் உண்டு. அது அம்பாளிடம் சரணம் அடைவது. (மாம் ஏவ ஏ ப்ரபத்யந்தே மாயாம் ஏதாம் தரந்தி தே - பகவத் கீதை - IX)

दुर्गे स्मृता हरसि भीति-मशेषजन्तोः
स्वस्थैः स्मृता मति-मतीव शुभां ददासि ।
दारिद्र्य-दुःख-भयहारिणि का त्वदन्या
सर्वोपकार-करणाय सदार्द्र-चित्ता ॥ २ ॥

துர்கே ஸ்ம்ருதா ஹரஸீ பீதிமஶேஷ ஜந்தோ
ஸ்வஸ்தை: ஸ்ம்ருதா மதிம தீவ ஶுபாம் ததாஸி
தாரித்ர்ய துக்கபய ஹாரிணிகா த்வதந்யா
ஸர்வோபகார கரணாய ஸதார்த்ர சித்தா *(2)*

கடத்தற்கரிய கஷ்டத்தில் நினைக்கப்பட்டால், நீ எல்லா ஜீவ ராசிகளுடைய பயத்தையும் போக்குகிறாய். இன்பத்தில் நினைக்கப்பட்டால் நலன் மிக்க மதியை அளிக்கிறாய். ஏழ்மையையும், துன்பத்தையும், பயத்தையம் போக்குபவளே! எல்லோருக்கும் உபகாரம் செய்ய எப்போதும் உருகும் நெஞ்சுடையவர் உன்னை தவிர யார் உளர்?

துர்கம் என்றால் எளிதில் கடக்க முடியாத இன்னல். எளிதில் உடைத்தெறிய முடியாதது. எளிதில் விலக்க முடியாதது. ஸம்ஸாரக் கடல் அப்படிப்பட்டது. இறைவனடி சேராதார் இந்த பிறவிப் பெரும் கடலை கடக்க முடியாது. இன்னல்களை நீக்க மனதில் அமைதியும். உறுதியும் வேண்டும். புத்தி தெளிவாக இருக்க வேண்டும். கஷ்டங்கள் வரும்பொழுது மனம் குன்றிவிடுகிறது. சஞ்சலப்படுகிறது. புத்தி மங்கி விடுகிறது. ஆதலால் இன்னல்களை நீக்கமுடிவதில்லை. உள்ளம் உருகி, பணிவான மனதுடன், நல்ல நோக்கத்துடன் துர்கையை நினைத்தால் அவள் உடனே மனதிற்கு அமைதி தந்து, உறுதியளித்து, பூர்ண புத்தி புகட்டி இன்னல்களைப் போகச்

செய்கிறாள். பயம் என்பது, நம்மை விட வேறானது. ஆங்கிலத்தில் சொன்னால் 'Fear is a sense of otherness'. - நம் நாக்கு நம் கூறான பற்களைப் பார்த்து பயம் கொள்ளுவதில்லை. ஏன் என்றால் நாக்கு பற்களுடன் அன்யோன்னியம் அடைந்திருக்கிறது. அப்படியே இவை எல்லாம் பரம்பொருளே என்ற ஞானம் வந்தால் பயம் நீங்கும்.

கஷ்டங்கள் வந்தால் பகவானை நினைப்பது மனிதனின் இயல்பு. சுகம், இன்பம் வந்தால் பகவானை மறந்து விடுகிறோம். அந்த சுகத்திலும், இன்பத்திலும் அம்பாளை நினைத்தால் அவள் நமக்கு நலன் மிக்க மதியை அளிப்பாள். நம்மை உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்வாள்.

இந்த உலகத்தில் யாரும் யாருக்கும் ப்ரதியுபகாரம் நினைக்காமல் உபகாரம் அல்லது உதவி செய்வதில்லை. ஒவ்வொரு உதவியின் பின்னாலும் எதிர்பார்ப்பு ஒளிந்துக் கொண்டு இருக்கிறது. இப்படி படைப்பில் யாரிடமாவது ப்ரதியுபகாரமின்றி உதவி கிடைக்கிறது என்றால் அது அம்பாளிடம் தான். நாம் எல்லாம் அம்பாளின் குழந்தைகள். ஆதலால் அம்பாள் நம்மிடம் கருணை நிறைந்த உள்ளத்துடன் இருக்கிறாள். எப்போதும் உருகும் நெஞ்சுடன் இருக்கிறாள். அஞ்ஞானத்தினால்தான் ஏழ்மை, பயம், துன்பமெல்லாம் வருகின்றன. பரம்பொருளை அறியாதது தான் அஞ்ஞானம். ஞானம் வந்தால் பகவத் ஸான்னித்தியம் கிடைத்துவிடும். இவை எல்லாம் ஈசனது என்ற தெளிவு வந்துவிடும். அப்பொழுது பயம் நீங்கும், ஏழ்மை அகலும், இன்பம் பெருகும். ஆதலால் அம்பாளைத் தவிர வேறு கதி எனக்கில்லை என்ற திடசித்தம் இருக்க வேண்டும். இதுதான் பக்தி. பக்தி அன்னிய சிந்தனை இல்லாமலிருப்பது. மனதை அம்பாளிடம் ஒருமுகமாக திருப்பி செயல்படும்படி செய்யவேண்டும்.

सर्वमंगल-मांगल्ये शिवे सर्वार्थ-साधिके ।
शरण्ये त्र्यंबके गौरि नारायणि
नमोऽस्तु ते ॥ ३ ॥

ஸர்வ மங்கல மாங்கல்யே ஶிவே ஸர்வார்த்த ஸாதிகே
ஶரண்யே த்ரயம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே. (3)

எல்லா மங்களங்களிலும் மங்களப் பொருளாய் விளங்குபவளே! அமைதியின் இருப்பிடமே, எல்லா நன்மைகளையும் அளிப்பவளே, எல்லா ஆசைகளை பூர்த்தி செய்விப்பவளே, சரணடைதற்குரியவளே, முக்கண் மூர்த்தியே, கௌரீ, நாராயணி தேவியே, உனக்கு நமஸ்காரம்.

தேவியை வழிபட்டால் மனதில் உறுதி உண்டாகும். கர்ம உறுப்புகளில் வலிமை பெருகும். செயல் பூர்ணத்துவம் பெறுவதற்கு அறிவு வளரும் ஆதலால் தேவியை மங்கள ரூபி என்கிறோம். மங்களம் என்றால் பிறருக்கு துன்பத்தை விளைவிக்காத இன்பம், நன்மை. இவ்வுலகில் நாம் காண்கிறதோ ஒரு பக்கம் நன்மை அதிகரித்தால் மற்றொரு பக்கம் தீமை தலை தூக்குகிறது. ஒருவன் செல்வந்தனாக ஆவதற்கு செயல்படும்போது அவன் பிறரை ஏழ்மைக்கு ஆளாக்க நேரிடுகிறது. மங்களம் என்பது ஸ்ரேயஸ்ஸை ஸதா தந்து கொண்டே இருக்கும். ஒருவனுக்கு மங்களம் உண்டானால் அவனால் பிறருக்கும் நன்மை கிட்டும். இறை உணர்வுடன் செயல்கள் புரிந்தால் மங்களம் நிச்சயமாக உண்டாகும். தேவியானவள் அமைதியை தருவாள். தேவியை நினைத்த மாத்திரத்தில் மனதில் ஆழ்ந்த அமைதி ஸித்திக்கும்.

ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் பெற வேண்டியது நான்கு விதமான அர்த்தங்கள் (செல்வங்கள்). அவை தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம். தர்மம் எனப்பட்டது நன்னெறி. நலன் தரும் வழிபாடு. அர்த்தம் பெறக்கூடிய செல்வங்கள். காமம் என்றால் குறிக்கோளை அடைவதற்கு வேண்டிய நோக்கம், ஆசை ஆகும். மோக்ஷம் என்றால் இன்னல்களிலிருந்து விடுபடுவது.

தவறு செய்யும் தன்மையை தவிர்ப்பது. தேவியை மனம் நெகிழ்ந்து வழிப்பட்டால் இந்த நான்கு அர்த்தங்களும் ஸித்திக்கும். நினைத்தது நடக்கும். கேட்டது கிடைக்கும்.

தேவியே சரணடைவதற்குரியவள். எப்படி ஏழை செல்வமிகுந்த செல்வந்தனிடம் சரணடைய வேண்டுமோ, எப்படி அவித்தையில் மூழ்கியவன் வித்யை பெறுவதற்கு விநய ஸம்பன்ன வித்வானை அணுகுவானோ அப்படியே நலம் பெற, வாழ்க்கை வளம் பெற தேவியை சரணமடைய வேண்டும். தேவிக்கு மூன்று கண்கள் உண்டு.ஆதலால் அவளை த்ரயம்பிகை என்று சொல்கிறோம். அந்த மூன்று கண்கள் சந்திரன், சூர்யன், அக்னி, அவை முறையே குளிர்ந்த ஒளி, உயிரை ஊட்டக்கூடிய வெப்பம் நிறைந்த ஒளி, ப்ராணனை நிலையாக நடத்தி செல்லக் கூடிய அக்னி (நெருப்பு). ஆதலால் இப்படி மேன்மை தரக்கூடிய தேவியைத்தான் வணங்க வேண்டும், போற்ற வேண்டும், வழிபட வேண்டும்.

शरणागत-दीनार्त-परित्राण-परायणे ।
सर्वस्यार्ति-हरे देवि नारायणि
नमोऽस्तु ते ॥ ४ ॥

ஶரணாகத தீநார்த்த பரித்ராண பராயணே
ஸர்வஸ்யார்த்தி ஹரே தேவி நாராயணி நமோ'ஸ்துதே (4)

தன்னைச் சரணடைந்த தீனர்களையும் துன்புற்றோரையும் காப்பாற்று வதையே தொழிலாக கொண்டவளே! எல்லோ-ருடைய துன்பத்தையும் துடைப்பவளே! நாராயணி தேவியே! உனக்கு நமஸ்காரம்.

எப்படி பசியில் கஷ்டப்படுபவன் உணவை நாடி செல்வானோ, எப்படி பற்றி எரியும் நெருப்பை அணைக்க தண்ணீரை நாடுகிறோமோ அப்படியே தீன நிலையில் இருப்பவர்கள் நாராயணியை நாடுவார்கள். தீனர்களை, தாழ்ந்த

துன்புற்ற, நோய்வாய்ப்பட்ட ஏழை எளியோரை காப்பாற்றுவதையே தொழிலாகக் கொண்டவள் நாராயணி தேவி, ஆதலால் ஏழ்மையினாலும், இன்னல்களினாலும், துன்பங்களினாலும் பரிதவிக்கும் மக்களை காப்பாற்றக் கூடியவள் தேவியே. அப்படிப்பட்ட மக்களின் இன்னல்களை நீக்கி த்ராணியை (வலிமையை) கொடுத்து அமைதியாகவும், ஆனந்தமாகவும் செயல்பட உதவுகிறாள் தேவி.

துன்பங்கள் எவ்வளவு கொடியதாக இருந்தாலும் அவற்றை எல்லாம் எளிதில் துடைப்பவள் தேவியே. நரனுக்கு போக்கிடமாக இருப்பவள் நாராயணி, அந்த நாராயணியை நாம் நித்தம் நித்தம் வழிபடுவோமாக. சரண்புகுவோமாக.

सर्वस्वरूपे सर्वेशे सर्वशक्ति-समन्विते ।
भयेभ्य-स्त्राहि नो देवि दुर्गे देवि
नमोऽस्तु ते ॥ ५ ॥

ஸர்வ ஸ்வரூபே ஸர்வேஶே ஸர்வஶக்தி ஸமந்விதே
பயேப்யஸ் த்ராஹி நோ தேவி துர்கே தேவி நமோ'ஸ்துதே (5)

அனைத்தின் வடிவமாகவும், அனைத்தையும் ஆள்பவளாகவும், சக்தி யனைத்தும் பொருந்தியவளாகவும் விளங்கும் தேவியே, பயங்கரமானவற்றிலிருந்து எங்களை காப்பாய், துர்கே தேவியே! உனக்கு நமஸ்காரம்.

வேதம் என்ன கூறுகிறதென்றால் படைப்பில் உள்ள அனைத்து ரூபங்களும் பரம்பொருளாகவே இருக்கின்றன. ப்ரஹ்மம் சொல்கிறது." அனைத்தையும் நான் படைத்தேன். படைத்தப்பின் அதனுள் ஊடுருவிச் சென்று அதை நானே இயங்கச் செய்கிறேன். உயிரும் நானே. உருவமும் நானே, உள்ளமும் நானே, நானின்றி இந்த படைப்பில் வேறொன்றுமில்லை. எல்லாம் என் லீலைகள்". ஆதலால் தேவியே அனைத்தின் வடிவம். பொருளின் உள்ளிருந்து

அவற்றை தேவியே ஆட்டி வைக்கிறாள். அவளே அனைத்தையும் ஆள்பவளாகிறாள்.

அம்பாள் மஹா சக்தி, உயிரினங்களில் உறையும் உயிரும் அவளே, அவற்றில் இருக்கும் சக்தியும் அவளே. அவள் ஆத்யா சக்தி. அனைத்து சக்திகளின் இருப்பிடம். இந்த மாதாவிலிருந்து தான் ஸரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி, காளி எல்லோரும் தோன்றினர். அனைத்து சித்திகளும் தேவியின் ஒரு சிறு பகுதி.

நான் நிரந்தரமாக இருக்க வேண்டும். நான் நிலையாக இருக்க வேண்டும். இந்த எண்ணத்திலிருந்துதான் பயம் வந்தது. "Fear is a sense of insecurity" - என் நிலை ஆட்டம் கண்டு விடுமோ என்ற பயம் வந்து விடுகிறது. அப்படிப்பட்ட பயத்திலிருந்து தேவி நம்மை விடுவித்துக் காப்பாள். எந்த இடத்தைச் சேர்ந்தால் அங்கு பயமில்லையோ, மரணம் இல்லையோ, மாறுதலில்லையோ, கஷ்டங்கள் இல்லையோ, எங்கு சுகம் நிரந்தரமாக இருக்குமோ, அமைதி அகலாமலிருக்குமோ, அதுவே துர்க்கம். துர்கை அப்படிப்பட்டவள். நாம் அனைவரும் அவளை வழிப்பட்டு, அவளைச் சரணடைந்து அருள் பெறுவோமாக.

रोगा-नशेषा-नपहंसि तुष्टा
रुष्टा तु कामान् सकला-नभीष्टान् ।
त्वामाश्रितानां न विपन्नराणां
त्वामाश्रिता ह्याश्रयतां प्रयान्ति ॥ ६ ॥

ரோகாநஶேஷாந பஹம்ஸி துஷ்டா
ருஷ்டா து காமாந் ஸகலா நபீஷ்டாந்
த்வாமாஸ்ரிதாநாம் ந விபந் நாராணாம்
த்வா மாஸ்ரிதா ஹ்யாஸ்ரயதாம் ப்ரயாந்தி (6)

நீ ஸந்தோஷமடைந்தால் எல்லா நோய்களையும் அறவே போக்குகிறாய். உன்னுடைய கோபத்தாலோ வேண்டப்படும்

காமங்களையு ம் அறவே அழிக்கின்றாய். உன்னை அண்டிய மனிதருக்கு விபத்து கிடையாது. உன்னை அண்டியவர் பிறர் அவர்களை அண்டுவதற்கு உரியவராகின்றார்.

தேவியை மனதார உள்ளம் கனிந்து அன்புடன் பக்தி சிரத்தையுடன் வழிபட்டால் அவள் சந்தோஷமடைகிறாள். அந்த நிலையில் வழிபட்டவளின் அனைத்து ரோகங்களையும், நோய்களையும் அழித்து ஆரோக்கியத்தைத் தருகிறாள். ஆனால் அவளுக்கு கோபம் வரும்படி எதாவதொரு அபசாரம் செய்தாலும் வெற்றிபெற வாய்ப்புள்ள கோரிக்கைகளனைத்தையும் அழித்து விடுகிறாள். ச்ருதி சொல்கிறபடி, ஆகம ஸாஸ்த்ரம் கூறியபடி, வழிபட்டால் தேவி சந்தோஷமடைகிறாள். ச்ருதியை புறக் கணித்து ஆகமம் சொல்லும் மரபுக்கு நேர்மாறாக செயல் புரிந்தால் இஹத்திலும், பரத்திலும் கிடைக்கக்கூடிய ஸ்வல்ப சுகத்தையும் துர்கை அழித்து விடுவாள்.

எது எப்பொழுது, எவ்விதமாக, எம்முறையில் செய்ய வேண்டுமென்று சொல்வதுதான் ஸாஸ்த்ரம். ஸாஸ்த்ரம் வேத பரம்பரை. தனிப்பட்ட மனிதரால் எழுதப்பட்டதல்ல. ஸாஸ்த்திரக் கோட்பாடுகளை மீறினால் அபராதத்துக்கும் தண்டனைக்கும் உள்ளாகுவோம். அதைச் சரிவர கடைப்பிடித்தால் நன்மை கிட்டும். வசதி வளரும், சாந்தம் நிலவும், இன்பம் பெருகும், பகவானை அண்டியவர்களுக்கு விபத்து வராது. பக்தர்களைக் காப்பதிலே கண்ணும் கருத்துமாய் பகவான் இருக்கிறான். தேவி லோக நாயகி. லோக ரக்ஷகி, காக்கும் தெய்வம். அவளை அன்பு கலந்த வணக்கத்துடன் நெறி தவறாமல், வழிபடுவோமாக.

सर्वा-बाधा-प्रशमनं त्रैलोक्यस्याखिलेश्वरि ।
एवमेव त्वया कार्य-मस्मद्वैरि-विनाशनम् ॥ ७ ॥

ஸர்வாபாதா - ப்ரமமநம் த்ரைலோக்யஸ்யாகிலேஸ்வரி
ஏவமேவ த்வயா கார்யமஸ்மத் வைரி விநாமநம் (7)

அகில நாயகியே! இவ்வாறே மூவுலகிலும் துன்பங்கள் முழுவதும் நாசம் செய்யப்படவேண்டும். உன்னால் எங்கள் சத்ருக்கள் அழிக்கப்படவேண்டும்.

துர்கை அஸுரர்களை அழித்த பிறகு தேவர்களை பார்த்து இங்ஙனம் கேட்டாள். 'தேவ கணங்களே! உலகிற்கு உபகாரமாக எந்த வரத்தை நீங்கள் மனதால் விரும்பினாலும் அதை கேட்கலாம். வரமளிப்பவளாகிய நான் அதைக் கொடுக்கிறேன்." அப்பொழுது தேவர்கள் கேட்ட வரம் இந்த ஸ்லோகமேயாகும். தேவர்கள் உலக நன்மைக்காக செயல்புரியும் ஒளிமயமான அம்ஸங்கள். ஆதலால் அவர்கள் போற்றத் தக்கவர்கள், பொருள்களை அவர்களுக்கே படைத்து, அதன் பின் அவற்றை தேவர்களின் அருளாக பெறவேண்டும்.

அனைத்து புவனங்களுக்கும் நாயகி தேவி, ஆதலால் அவளை அகிலேச்வரி எனக்கூறுகிறோம். புவனங்களை உய்வித்து, ஆளும் அரசி அவள். லோகங்களென்றால் புவனங்கள். உயிரினங்கள் செயல்புரியும் அரங்கம் புவனம் என்று சொல்லப்படுகிறது. இங்கு கூறியுள்ள மூன்று லோகங்கள் அல்லது புவனங்கள் முறையாக

1. ஆதி பௌதிகம் 2. ஆதி தைவிகம் 3. ஆதி ஆத்மிகம்

உபாதைகள் மூவகையாகும். ஆதி பௌதிக, ஆதி ஆத்மிக, ஆதி தைவிகமாகும்.

ஆதி பௌதிகம் நம்முடைய புலன்களால் உணரப்படும் விஷயங்கள். இவைகளிலிருந்து நமக்கு துன்பம் நேரிடக் கூடும்.

ஆதி ஆத்மிகமென்றால் நம் உடலை, சரீரத்தை சேர்ந்தது என்று கூறுவார்கள். உடலிலிருந்தும், சரீரத்திலிருந்தும் வரக்கூடிய உபாதைகளை ஆதி ஆத்மிக உபாதைகள் (துன்பங்கள்) என்று சொல்வார்கள்.

ஆதி தைவிகம் என்றால் நம் புலன்களிலிருக்கும் மனது, புத்தி சித்தத்திலிருக்கும் சக்திகள், அவைகளிலிருந்தும் நமக்கு உபாதை (துன்பம்) நேரிடலாம்.

மற்றொரு நோக்குடன் பார்த்தால் மூன்று உலகங்கள் விழிப்புலகம், கனவுலகம், நித்திரை உலகம். இவைகளிலிருந்தும் நமக்கு, துன்பம் வரலாம். அப்படிப்பட்ட மூன்று உலகங்களின் உபாதைகளை நீக்க வல்லவள் தேவியே - ஆதலால் அவளை எல்லா உபாதைகளையும் நீக்க வேண்டுமென்று வழிபடவேண்டும்.

ஒவ்வொரு மனிதனிலும் தெய்வீக அம்சம், அஸுர அம்சம் என்று இரண்டு அம்சங்கள் உண்டு. சில சமயங்களில் அஸுர அம்சம் மேலோங்கி தெய்வீக அம்சத்தை துன்புறுத்தும். தெய்வீக அம்ஸம்தான் ஞான இந்த்ரியங்கள், மனஸ், புத்தி, சித்தும். இவற்றை அஸுர அம்சமான காம, க்ரோத, லோப, மோக, மத, மாத்ஸர்ய அம்சங்கள் அழிக்க முயற்சி செய்யும். அந்நிலையில் தேவியைச் சரணடைந்தால் அஸுர அம்சம் வலிவு இழந்து தெய்வீக அம்சம் மேலோங்கும். நமக்கு சத்ருக்கள் ரஜோகுணத்திலிருந்தும், தமோ குணத்திலிருந்தும் உற்பத்தி ஆன காம க்ரோதாதிகள். அவை மனது, புத்தி, புலன்களில் புகுந்து ஒளிந்து கொண்டு அவற்றைத் தம் வசமாக்கி ஆட்சி புரியும் . அந்நிலையை தவிர்க்க, புலன்களை அடக்கி, மனதைத் தூய்மையாக்கி, புத்தியை தேவியின் பால் செலுத்த வேண்டும். அப்பொழுது துன்பம் நீங்கும். இன்பம் நிலைக்கும். தேவியை அனுதினமும் வழிப்படுவோமாக.

இந்த ஸப்தஸ்லோகியை தினம்தோறும் குறைந்தது பதினாறு முறையாவது பக்தி சிரத்தையுடன் தேவியின் படத்தெதிரில் அமர்ந்து, விளக்கேற்றி ஜபிப்போமாக. மங்களம் உண்டாகட்டும். உலகம் நலம் பெறட்டும்.

* * *

सिद्धकुञ्जिकास्तोत्रम्

शिव उवाच

श्रृणु देवि प्रवक्ष्यामि कुञ्जिकास्तोत्रमुत्तमम् ।
येन मन्त्रप्रभावेण चण्डीजापः शुभो भवेत् ॥ १ ॥

न कवचं नार्गलास्तोत्रं कीलकं न रहस्यकम् ।
न सूक्तंनापिध्यानं च न न्यासो न च वार्चनम् ॥ २ ॥

कुञ्जिकापाठमात्रेण दुर्गापाठफलं लभेत् ।
अति गुह्यतरं देवि देवानामपि दुर्लभम् ॥ ३ ॥

गोपनीयं प्रयत्नेन स्वयोनिरिव पार्वति ।
मारणं मोहनं वश्यं स्तम्भनोच्चाटनादिकम् ।
पाठमात्रेण संसिद्धयेत् कुञ्जिकास्तोत्रमुत्तमम् ॥ ४ ॥

अथ मन्त्रः

ॐ ऐं ह्रीं क्लीं चामुण्डायै विच्चे ॥ ॐ ग्लौं हुं क्लीं जूं सः ज्वालय ज्वालय ज्वल ज्वल प्रज्वल प्रज्वल ऐं ह्रीं क्लीं चामुण्डायै विच्चे ज्वल हं सं लं क्षं फट् स्वाहा ॥ इतिमन्त्रः ॥ नमस्ते रुद्ररूपिण्यै नमस्ते मधुमर्दिनि ॥ नमः कैटभहारिण्यै नमस्ते महिषार्दिनि ॥ १ ॥ नमस्ते शुम्भहन्त्र्यै च निशुम्भासुरघातिनि ॥ २ ॥ जाग्रतं हि महादेवि जपं सिद्धं कुरुष्व मे ॥ ऐंकारी सृष्टिरूपायै ह्रींकारी प्रतिपालिका ॥ ३ ॥ क्लींकारी कामरूपिण्यै बीजरूपे नमोऽस्तु ते ॥ चामुण्डा चण्डघाती च यैकारी वरदायिनी ॥ ४ ॥ विच्चे चाभयदा नित्यं नमस्ते मन्त्ररूपिणि ॥ ५ ॥ धां धीं धूं धूर्जटेः पत्नी वां वीं वूं वागधीश्वरी । क्रां क्रीं क्रूं कालिका देवि शां शीं शूं मे शुभं कुरु ॥ ६ ॥ हुं हुं हुंकाररूपिण्यै जं जं जं जम्भनादिनि ॥ भ्रां भ्रीं भ्रूं भैरवी भद्रे भवान्यै ते नमो नमः ॥ ७ ॥ अं कं चं टं तं पं यं शं वीं दुं ऐं वीं हं क्षं धिजाग्रं धिजाग्रं त्रोटय त्रोटय दीप्तं कुरु कुरु स्वाहा ॥ पां पीं पूं पार्वती पूर्णा खां खीं खूं खेचरी तथा ॥ ८ ॥ सां सीं सूं सप्तशती देव्या मन्त्रसिद्धिं कुरुष्व मे ॥ इदं तु कुञ्जिकास्तोत्रं मन्त्रजागर्तिहेतवे ॥ अभक्ते नैव दातव्यं गोपितं रक्ष पार्वति ॥ यस्तु कुञ्जिकया देवी हीनां सप्तशतीं पठेत् ॥ न तस्य जायते सिद्धिररण्ये रोदनं यथा ॥

इति श्रीरुद्रयामले गौरीतन्त्रे शिवपार्वतीसंवादे

कुञ्जिकास्तोत्रं सम्पूर्णम् ।

॥ ॐ तत्सत् ॥

ஸித்தகுஞ்ஜிகாஸ்தோத்ரம்

ஶிவ உவாச

ஸ்ருணு தேவி ப்ரவக்ஷ்யாமி குஞ்சிகாஸ்தோத்ரமுத்தமம்

யேந மந்த்ரப்ரபாவேண சண்டிஜாப: ஶுபோ பவேத். 1

ந கவசம் நார்கலாஸ்தோத்ரம் கீலகம் ந ரஹஸ்யகம்

ந ஸூக்தம் நாபி த்யாநம் ச ந ந்யாஸோ ந ச வார்சநம் 2

குஞ்சிகாபாடமாத்ரேண துர்காபாடஃபலம் லபேத்

அதி குஹ்யதரம் தேவி தேவாநாமபி துர்லபம் 3

கோபநீயம் ப்ரயத்நேந ஸ்வயோநிரிவ பார்வதி

மாரணம் மோஹநம் வஶ்யம் ஸ்தம்பநோச்சாடநாதிகம் 4

பாடமாத்ரேண ஸம்ஸித்யேத் குஞ்சிகாஸ்தோத்ரமுத்தமம்

அத மந்த்ர:

1. ஓம் ஐம் ஹ்ரீம் க்லீம் சாமுண்டாயை விச்சே. ஓம் க்லௌம் ஹூம் க்லீம் ஜூம் ஸ: ஜ்வாலய ஜ்வாலய ஜ்வல ஜ்வல ப்ரஜ்வல ப்ரஜவல ஐம் ஹ்ரீம் க்லீம் சாமுண்டாயை விச்சே ஜ்வல ஹம் ஸம் லம் க்ஷம் ஃபட் ஸ்வாஹா. இதிமந்தர: நமஸ்தே ருத்ரரூபிண்யை நமஸ்தே மதுமர்திநி. நம: கைடபஹாரிண்யை நமஸ்தே மஹிஷார்திநி.

2. நமஸ்தே ஶும்பஹந்த்ர்யை ச நிஶும்பாஸுரகாதிநி.

3. ஜாக்ரதம் ஹி மஹாதேவி ஜபம் ஸித்தம் குருஷ்வ மே ஐம்காரீ ஸ்ருஷ்டிரூபாயை ஹ்ரீம்காரி ப்ரதிபாலிகா.

4. க்லீம்காரி காமரூபிண்யை பீஜரூபே நமோ'ஸ்து தே. சாமுண்டா சண்டகாதி ச யைகாரி வரதாயிநி.

5. விச்சே சாப்யதா நித்யம் நமஸ்தே மந்த்ரரூபிணி.

6. தாம் தீம் தூம் தூர் ஜடே: பத்நீ வாம் வீம் வூம் வாகதீஸ்வரீ க்ராம் க்ரீம் க்ரும் காளிகா தேவி ஶாம் ஶீம் ஶூம் மே ஶூபம் குரு.

7. ஹூம் ஹூம் ஹூம்காரரூபிண்யை ஜம் ஜம் ஜம் ஜம்பநாதிநீ ப்ராம் ப்ரீம் ப்ரூம் பைரவீ பத்ரே பவாந்யை தே நமோ நம:

8. அம் கம் சம் டம் தம் பம் யம் ஸம் வீம் தும் ஐம் வீம் ஹம் க்ஷம் திஜாக்ரம் திஜாக்ரம் த்ரோடய த்ரோடய தீப்தம் குரு குரு ஸ்வாஹா. பாம் பீம் பூம் பார்வதீ பூர்ணா காம் கீம் கூம் கேசரி ததா.

9. ஸாம் ஸீம் ஸூம் ஸப்தஶதீ தேவ்யா மந்த்ரா ஸித்திம் குருஸ்த்ர மே. இதம் து குஞ்ஜிகயா மந்த்ரஸித்திம் குருஷ்வ மே. இதம் து குஞ்சிகாஸ்தோத்ரம் மந்த்ரஜாகர்திஹேதவே - அபக்தே நைவ தாதவ்யம் கோபிதம் ரக்ஷ பார்வதி. யஸ்து குஞ்ஜிகயா தேவி ஹீநாம் ஶப்தஸதீம் படேத். ந தஸ்ய ஜாயதே ஸித்ரரண்யே ரோதநம் யதா.

இதி ஶ்ரீ ருத்ரயாமலே கௌரீ தந்த்ரே ஶிவபார்வதீ ஸம்வாதே

குஞ்ஜிகா ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்

ஓம் தத்ஸத்

* * *

॥ श्रीदेव्यपराध-क्षमापन-स्तोत्रम् ॥

மன்னிக்க வேண்டுகிறேன்

ஸ்ரீ தேவ்யபராத - க்ஷமாபண - ஸ்தோத்ரம்

न मन्त्रं नो यन्त्रं तदपि च न जाने स्तुति-महो
न चाह्वानं ध्यानं तदपि च
न जाने स्तुति-कथाः ।
न जाने मुद्रास्ते तदपि च न जाने विलपनं
परं जाने मात-स्त्वदनुसरणं
क्लेशहरणम् ॥ १ ॥

ந மந்த்ரம் நோ யந்த்ரம் தத பி ச ந ஜானே ஸ்துதி-மஹோ
ந சாஹ்வாநம் த்யாநம் தத்பி ச ந ஜானே ஸ்துதி-கதா:
ந ஜானே முத்ராஸ்தே ததபி ச ந ஜானே விலபநம்
பரம் ஜானே மாதஸ்-த்வத நுஸரணம் க்லேஶ-ஹரணம் (1)

தாயே! உன்னை வழிபட எனக்கு மந்த்ரமோ, யந்த்ரமோ, ஸ்தோத்ரமோ, அல்லது அழைக்க ஆஹ்வான முறையோ, அல்லது த்யானம் செய்யவோ, உன் கதைகளை ஸ்துதி ரூபமாக பாடவோ தெரியாது. முத்திரைகளை காட்டி, விலேபனம் செய்யும் முறையில் உன்னை வழிபட தெரியவில்லையே. ஆனால் எல்லாவிதங்களிலும் கஷ்டங்களைப் போக்கடிக்கச் செய்யும் உன்னை வழிபடுதல் ஒன்று மட்டும் தெரிந்திருக்கிறேன். பொறுத்தருள்வாய் தாயே! மன்னிக்க வேண்டுகிறேன்.

विधे-रज्ञानेन द्रविण-विरहेणालसतया
विधेयाशक्यत्वात्तव चरणयो-र्या
च्युतिरभूत् ।
तदेतत् क्षन्तव्यं जननि सकलोद्धारिणि शिवे
कुपुत्रो जायत क्वचिदपि कुमाता
न भवति ॥ २ ॥

விதே-ரஜ்ஞாநேந த்ரவிண-விரஹேண-லஸதயா
விதேயாஸக்யத்வாத் தவ சரணயோர்-யா ச்யுதிரபூத்
ததேதத் க்ஷந்தவ்யம் ஜநநி ஸகலோத் தாரிணி ஸிவே
குபுத்ரோ ஜாயேத க்வசிதபி குமாதா ந பவதி (2)

மங்கள ஸ்வரூபியே, சிவே, பூஜா விதி வழிபாடு தெரியாததினாலோ, என் அஞ்ஞானத்தாலோ, ஏழ்மையாலோ, சோர்வினாலோ, முறைப்படி வழிபடத் தெரியாததினாலோ, உன் திருவடியை சேவிக்கத் தவறிவிட்டேன். அனைத்து உயிரினங்களையும் உய்விப்பவளே, தாயே, என்னை மன்னிக்க வேண்டுகிறேன். ஏனெனில் புதல்வன் கெட்டவனாக இருக்கலாம். ஆனால் ஒருபொழுதும் கெட்ட தாய் என்பவள் கிடையாது.

पृथिव्यां पुत्रास्ते जननि बहवः सन्ति सरलाः
परं तेषां मध्ये विरलतरलोऽहं तव सुतः।
मदीयोऽयं त्यागः समुचित-मिदं नो तव शिवे
कुपुत्रो जायेत क्वचिदपि कुमाता
न भवति ॥ ३ ॥

ப்ருதிவ்யாம் புத்ராஸ்தே ஜநநி பஹவ: ஸந்தி ஸரலா:
பரம் தேஷாம் மத்யே விரலதரலோ'ஹம் தவ ஸுத:
மதீயோ'யம் த்யாக: ஸமுசித-மிதம் நோ தவ ஸிவே
குபுத்ரோ ஜாயேத க்வசிதபி குமாதா ந பவதி (3)

இந்த அவனியில் உனக்கு எத்தனையோ புத்திரர்கள் உண்டு. அவர்களில் நான் மிகவும் தாழ்ந்த நிலையிலும், கஷ்டத்துக்குட்பட்டவனாகவுமிருக்கிறேன். அம்மா நீ என்னை கை விடுவது உனக்கு உசிதமாகாது. ஏனெனில் பிள்ளை கெட்டவனாக இருக்கலாம். ஆனால் தாய் ஒருபொழுதும் கெட்டவளாக இருந்ததில்லையே! ஹே ஜனனி! தாயே! உன் சேய் நான். மன்னிக்க வேண்டுகிறேன்.

जगन्मात-र्मात-स्तव चरण-सेवा न रचिता
न वा दत्तं देवि द्रविणमपि
भूय-स्तव मया ।
तथापि त्वं स्नेहं मयि निरुपमं यत्प्रकुरुषे
कुपुत्रो जायेत क्वचिदपि कुमाता
न भवति ॥ ४ ॥

ஜகந்மாதர்-மாதஸ்-தவ சரண-ஸேவா ந ரசிதா
ந வா தத்தம் தேவி த்ரவிணமபி பூயஸ்-தவ மயா
ததாபி த்வம் ஸ்நேஹம் மயி நிருபமம் யத் ப்ரகுருஷே
குபுத்ரோ ஜாயேத க்வசிதபி குமாதா ந பவதி (4)

தாயே! ஜகன்மாதா! நான் ஒருபொழுதும் உன் திருவடியை வழிபடவில்லை. உனக்காக ஒருபொழுதும் தனத்தை அர்ப்பணிக்கவில்லை. அப்படி இருந்தும் என்பால் உன் ஒப்பற்ற நட்பை கொண்டால் அது உண்மையான நட்பாகும். ஏனெனில் புத்திரன் கெட்டவனாக இருக்கலாம். ஆனால் ஒருபொழுதும் தாய் கெட்டவளாக இருந்ததில்லையே! தாயே என் குறைகளை மன்னித்து ஆட்கொள்வாயாக!

परित्यक्ता देवा विविध-विध-सेवाकुलतया
मया पंचाशीते-रधिक-मपनीते तु वयसि ।
इदानीं चेन्मात-स्तव यदि कृपा नापि भविता
निरालंबो लंबोदरजननि कं
यामि शरणम् ॥ ५ ॥

பரிபத்யக்தா தேவா விவிதவித-ஸேவா-குலதயா
மயா பஞ்சாசீதே-ரதிக-மபநீதே து வயஸி
இதாநீம் சேந்-மாதஸ்-தவ யதி க்ருபா நாபி பவிதா
நிராலம்போ லம்போதர ஜநநி கம் யாமி சரணம் (5)

ஆதாரத்திற்கு இருப்பிடமே! லம்போதரரின் (விநாயக பெருமானின்) தாயே! எத்தனையோ விதமான தேவ வழிபாட்டை புறக்கணித்து உலகில் புலப் பொருட்களுக்கு அடிமையாகி என் வாழ்வில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் (பாதிக்கு மேல்) வீணடித்து விட்டேன். இந்த நிலையில் நீயும் என்பால் கருணை காட்டவில்லை என்றால், ஆதாரமற்றவனான நான் எங்கு சரண் புகுவேன்? தாயே, மன்னிக்க வேண்டுகிறேன்.

श्वपाको जल्पाको भवति मधुपाकोपम-गिरा
निरातंको रंको विहरति चिरं
कोटिकनकैः ।
तवापर्णे कर्णे विशति मनुवर्णे फलमिदं
जनः को जानीते जननि जपनीयं
जपविधौ ॥ ६ ॥

ச்வபாகோ ஜல்பாகோ பவதி மதுபாகோ்பமகிரா
நிராதங்கோ ரங்கோ விஹரதி சிரம் கோடி-கநகை:
தவாபர்ணே கர்ணே விஶதி மநுவர்ணே பலமிதம்
ஜந: கோ ஜாநீதே ஜநநி ஜபநீயம் ஜபவிதௌ (6)

ஹே ஜனனி, தாயே! உன் மந்த்ராக்ஷரங்கள் காதில் விழுந்த மாத்திரத்திலேயே சண்டாளன் ஞானியாகவும்; இனிமையான, தேன் மதுரமான வாக்குகள்கூடிய பெரிய சொற்பொழி வாளனாகவும் ஆகிவிடுகிறான். பரம தரித்திரன் உன்னை வழிபட்டால் அவனை கோடிஸ்வரனாக ஆக்கி வெகுகாலம் பயமில்லாமல் வாழவைக்கிறாய். அப்படி இருக்கையில், உன்னை தினந்தோறும் வழிபட்டு, வணங்கி, ஜபித்து, அனுஷ்டானம் செய்து, பூஜித்தால் அதனால் கிடைக்கக்கூடிய பலனை யாரால் அறியமுடியும்? பெருமை மிக்கவளே, கருணை காட்டம்மா!

चिता-भस्मालेपो गरलमशनं दिक्पट-धरो
जटाधारी कण्ठे भुजगपतिहारी पशुपतिः ।
कपाली भूतेशो भजति जगदीशैक-पदवीं
भवानि त्वत्पाणिग्रहण-परिपाटी-
फलमिदम् ॥ ७ ॥

சிதா-பஸ்மாலேபோ கரலமஶநம் திக்-பட-தரோ
ஜடாதாரீ கண்டே புஜகபதிஹாரீ பஶுபதி:
கபாலீ பூதேஶோ பஜதி ஜகதீஶைக- பதவீம்
பவாநி த்வத்-பாணிக்ரஹண-பரிபாடீ பலமிதம் *(7)*

ஹே பவானி, எவர் சாம்பலை பூசிக்கொண்டும், விஷத்தை உண்டும், வெற்றிடத்தை ஆடையாகத் தரித்தும் (நிர்வாணமாக இருந்தும்), ஜடாதாரியாகவும், சர்ப்ப மாலை அணிந்தும், கையில் மண்டை ஓட்டை ஏந்தி திரிந்தும் பூதங்களுக்கு ஈசனாக இருக்கும் அந்த பசுபதி ஜகதீஸ்வரன் என்ற பதவியை அடைந்து பூர்ணத்துவம் பெற்றது அவர் உன் கை பற்றி உன்னை மணந்ததின் பலனே அன்றோ! என்மேல் இரங்கியருள்வாயாக!

न मोक्षस्याकांक्षा न च विभव-वांछापि च न मे
न विज्ञानापेक्षा शशिमुखि
सुखेच्छापि न पुनः ।
अतस्त्वां संयाचे जननि जननं यातु मम वै
मृडानी रुद्राणी शिव शिव
भवानीति जपतः ॥ ८ ॥

ந மோக்ஷஸ்யாகாங்க்ஷா ந ச விபவவாஞ்சாபி ச ந மே
ந விஜ்ஞாநாபேக்ஷா ஶஶிமுகி ஸுகேச்சாபி ந புந:
அதஸ்-த்வாம் ஸம்யாசே ஜநநி ஜநநம் யாது மம வை
ம்ருடாநீ ருத்ராணீ ஶிவ ஶிவ பவாநீதி ஜபத: *(8)*

ஹே சந்த்ர முகி, தாயே! எனக்கு மோக்ஷத்தில் அக்கரையில்லை. இந்த சம்சாரத்தின் வைபவங்களில்

இச்சையில்லை. அறிவிலோ அல்லது சுகத்திலோகூட விருப்பம் இல்லை! ஆகையால் நான் உன்னிடம் வேண்டுவதெல்லாம் என் ஆயுள் முழுவதுவும் ம்ருடானி, ருத்ராணி, சிவே, சிவே, பவானி என்ற உன் நாமங்களை ஜபித்துக் கொண்டே என் வாழ்க்கையை கடத்த வேண்டுமென்பதே! அருள் புரிவாயாக!

नाराधितासि विधिना विविधोपचारैः
किं रूक्षचिन्तनपरै-र्न कृतं वचोभिः ।
श्यामे त्वमेव यदि किंचन मय्यनाथे
धत्से कृपा-मुचित-मंब परं तवैव ॥ ९ ॥

நாராதிதாஸி விதிநா விவிதோபசாரை:
கிம் ரூக்ஷசிந்தநபரைர்-ந க்ருதம் வசோபி:
ச்யாமே த்வமேவ யதி கிஞ்சந மய்யநாதே
தத்ஸே க்ருபா-முசித-மம்ப பரம் தவைவ (9)

ஹே ச்யாமே! நான் முறைப்படி செய்ய வேண்டிய விதவிதமான உபசார பூஜைகளை உனக்குச் செய்யவில்லை. விரும்பத்தகாத எண்ணங்களினால் உன்னுடைய வாக்குகளை அலட்சியப்படுத்தி இருக்கிறேன். அனேக தவறுகளைச் செய்திருக்கிறேன். ஆயினும் அனாதையான என்மேல் சிறிதளவாவது கருணை செய்தால் அது உனக்குத்தான் மிகவும் பெருமை, அம்மா! ஏனெனில் நீ என் தாய் அல்லவா?

आपत्सु मग्नः स्मरणं त्वदीयं करोमि
दुर्गे करुणार्णवेशि ।
नैतच्छठत्वं मम भावयेथाः क्षुधातृषार्ता
जननीं स्मरन्ति ॥ १० ॥

ஆபத்ஸு மக்ந: ஸ்மரணம் த்வதீயம்
கரோமி துர்க்கே கருணார்ணவேசி
நைதத்ச்சடத்வம் மம பாவயேதா:
க்ஷுதா-த்ருஷார்த்தா ஜநநீம் ஸ்மரந்தி (10)

ஹே துர்கே! தயா ஸாகரி! மஹேஸ்வரி! நான் எந்த விதமான இக்கட்டுகளுக்கிடையில் இருந்தாலும் உன்னையேதான் நினைத்துக் கொண்டிருப்பேன். இதை என்னுடைய மூர்க்கத்துவம் என்று நினைத்து விடாதே! ஏனெனில் பசி, தாகத்தினால் பீடிக்கப்பட்டிருக்கும் குழந்தையானது தன்னுடைய தாயைத்தானே நினைத்து கொள்கிறது? அம்மா! என்னை தள்ளிவிடாதே தாயே!

जगदंब विचित्र-मत्र किं
परिपूर्णा करुणाऽस्ति चेन्मयि ।
अपराध-परंपरावृतं
न हि माता समुपेक्षते सुतम् ॥ ११ ॥

ஜகதம்ப விசித்ர-மத்ர கிம்
பரிபூர்ணா கருணா'ஸ்தி சேந்மயி
அபராத-பரம்பராவ்ருதம் ந ஹி
மாதா ஸமுபேக்ஷதே ஸுதம் (11)

ஹே ஜகதம்பா! உனக்கு என் மேல் பரிபூர்ணமான கருணை இருக்குமானால் இதில் ஆச்சரியம் என்ன! ஏனெனில் அநேக குற்றம் குறைகளோடுகூடிய மகனைக்கூட ஒரு தாய் தள்ளி விடுவதில்லையே! தாயே! என்மேல் உன் கருணையைப் பொழிவாயாக!

मत्समः पातकी नास्ति
पापघ्नी त्वत्समा न हि ।
एवं ज्ञात्वा महादेवि यथा योग्यं तथा कुरु ॥

மத்ஸம: பாதகீ நாஸ்தி பாபக்நீ த்வத்ஸமா ந ஹி
ஏவம் ஜ்ஞாத்வா மஹாதேவி யதா யோக்யம் ததா குரு (12)

ஹே மஹாதேவி! என் போல் பாவி வேறு யாருமில்லை. உன் போல் பாபத்தை போக்குபவளும் யாரும் இல்லை. இதை அறிந்துணர்ந்து எதை செய்யத்தகுமோ அதை செய்வாயாக!

ஹே அம்மா, உனக்கு என் அனந்த கோடி நமஸ்காரங்கள்.

॥ इति श्रीदेव्यपराध-क्षमापन-स्तोत्रम्
समाप्तम् ॥

இதி தேவ்யபராத-க்ஷமாபன-ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்.

* * *

உ

ஸ்ரீ செங்கச்சேரி மாரியம்மன் பயோதரப்பத்து

செஞ்சுடர்செங் கச்சேரி தேவி பயோதரத்தை
அஞ்சிரண்டு பாடி அடிபணியக் - கெஞ்சினேன் !
நம்பித் தொழுதடைந்தேன் நானும் வலம்புரித்
தும்பிக்கை நாதன் துணை.

நூல்

திருவடியார் தமக்கினிய சிவஞானப் பால் சொரியத்
திரண்டுநிற்கும் இருதனமோ ! தில்லைப் பொன் னம்பலத்தின்
குருமணியை உலகியற்றக் கூவிடவோர் சாதனமோ !
கொண்டாடி அடியவர்கள் குறைதீரக் கொண்டனையோ !
உருபுணைந்தே எமக்கருள உவந்துவந்த பரம்பொருளே !
உலகுய்ய அறம்புரியும் உத்தமியே உமையவளே !
பருவவெழில் படைத்தெமக்குப் பலநலமும் பயந்திடுமே
பார்புகழ்செங் கச்சேரி பார்வதியுன் பயோதரமே. 1

சொல்லமைத்துச் செந்தமிழில் சுந்தரமாய்ப் பாடவைத்தே
சுகமளித்தாட் கொண்டிடுமே ! துர்கையுன்றன் கருணைபெற்று
வல்லவராய் அடியவர்கள் வாழ்ந்தெல்லா நலமுமுற்று
வந்துன்னை யடைந்திடவோர் மார்க்கத்தைக் காட்டிடுமே !
நல்லவழி சேர்த்தெம்மை நாளெல்லாம் உனைத்துதித்தே
ஞானமுற வைத்திடுமே ! நாயகியுன் இருதனங்கள் !
பல்லவமாய்ப் படர்ந்தந்த பரம சிவன் தனைப்புணரும்
பதிசெங்கச் சேரியுறை பகவதியுன் பயோதரமே 2

மொட்டவிழும் தாமரையோ ! முப்பாலும் உரைப்பனவோ!
 மூர்க்கத்தை ஒழித்தெம்மை முக்திவழி சேர்ப்பனவோ !
இட்டமொடுன் திருநாமம் எண்ணிடச்செய் வனவோ ! நல்
 லேற்றமளித் தாள்பவையோ ! எனதன்னை யுன் தனங்கள் !
துட்டர்கள் பயந்தொழியத் தொல்லைகளைத் தீர்ப்பவையோ !
 தூய்மையின் தனியுருவோ ! தொல்வினையால் நானிங்கு
பட்டதுயர் அனைத்தையுமே பகலவன்முன் பனிபோல
 பாழ்த்திடும்செங் கச்சேரி பரையவளுன் பயோதரமே. 3

துங்கமுறும் சிந்தனையைத் தூண்டியன்பர் கள்வாழ்வில்
 துணைநிற்கும் சக்தியதோ ! தூய்மைசேர் மனத்தினிலே
தங்கவரும் சாந்தியதோ ! தங்கத்தால் செய்திட்ட
 தனிக்கலசம் தானதுவோ ! சதகோடி சூரியரும்
மங்கச்செய் ஒளியதுவோ ! மாயைதனை விலக்கவரும்
 மந்திரத்தின் ஒருருவோ ! மாரியுன்றன் இருதனங்கள் !
பங்கமின்றி யேயெமக்குப் பாங்காக செயமளிக்கும்
 பண்பார்செங் கச்சேரி பார்ப்பதியுன் பயோதரமே. 4

சிவலிங்கத் தையணைத்துத் திருமுலையால் தழும்பேறச்
 செய்திட்டாய் விளையாடல் ! சேரியுறை மாரியளே !
யுவவடிவு கொண்டிட்டாய் ! யுகம்பலவும் கடந்தவளே !
 யூகத்தில் அடங்காத யோகவுரு படைத்தவளே !
தவக்கோல காமாட்சி ! தரணிபுகழ் சங்கரியே !
 தங்குதடை யின்றிவரும் தமிழ்க்கவிதை யானவளே !
பவபயத்தை அகற்றிநல்ல பத்திமையைப் பயிற்றுவிக்கும்
 பதிசெங்கச் சேரியுறை பவானியுன்றன் பயோதரமே. 5

மூவர்க்கும் மூத்தவளே ! மோகனமே ! முத்தமிழே !
மோசவினை தீர்த்தெமது மும்மலம் நீக் கியருள்வாய் !
நாவலிக்க வீண்பேச்சு நான்பேசச் செய்யா துன்
நாமங்கள் ஓதுவதே நாளுமென்றன் தொழிலாக்கி
கூவவந்தென் குலங்காக்கும் கோமளமே ! குந்தவையே !
கொற்றியளே ! கோலவெழில் கூட்டியென்றன் குறைதீரப்
பாவமகற் றித்தமிழில் பாமாலை படைக்கவைக்கும்
பதிசெங்கச் சேரியுறை பவதியுன்றன் பயோதரமே 6

அனைத்துலகும் உன்குழந்தை ! ஆதாரம் நீ யம்மா !
அன்புமுலைப் பாலீயும் ஆதிசக்தி மாரியளே !
உனைத்துணையென் றிவ்வுலகில் உயிர்வாழும் சேய்களுக்கே
உண்மையொளி காட்டவரும் ஓங்காரம் உன்தனங்கள் !
திணையளவும் தகுதியில்லா தீனனெனைக் காத்துவரும்
சிங்காரம் சேர்தமிழோ ! சிவசக்திக் கோலமதோ !
பனைமுதலாய் தலவிருட்சம் பலவுளசெங் கச்சேரி
பதிநிலைகொண் டிலங்கிவரும் பண்டையளுன் பயோதரமே.
7

ஞானக்கண் திறவாமல் நாரணியுன் மடியிலாடும்
நானுன்றன் சிசுவன்றோ ! நான்மறைகள் நவிலறிவை
ஊனமகற்றிப் புகட்டுவாய் ! மெய் யுணர்வுற்றுப் பசிநீங்கி
உன்னாமங் கள்பலவும் ஓதியென்றன் பிறப்பொழிப்பேன் !
மானவனாய் நான்வாழ மாரியளே துணையானாய் !
மங்காதபெருஞ்சுடரே ! மாதவமும் உன்பணியே !
பானகமாய்ப் பாலளித்து பாலிக்கும் பெருமைசேர்
பர்வதரா சன்மகளே ! பாங்குறுமுன் பயோதரமே. 8

பாலகண பதியோடு பன்னிருகை வேலவனும்
பம்பைநதி நாதனுமே பார்வதியுன் செல்வங்கள் !
பாலருளி ஞானமீந்தாய் பார்புகழ்சம் பந்தனுக்கே !
பாதார விந்தத்தைப் பணிந்திடயா மும்வந்தோம் !
பாலருள்ளம் ஏங்கிநிற்றல் பாராள்தே விக்கழகோ !
பைங்கன்று கதறல் தாய்ப் பசுகேட்டுப் பொறுத்திடுமோ !
பாலமையை அகற்றியுன்றன் பதமலரைப் பாடவைக்கும்
பதிசெங்கச் சேரியுறை பைரவியுன் பயோதரமே. 9

அங்காளி பரம்பொருளே ! அடைக்கலமாய் ஓடிவந்தோம் !
அண்டமெலாம் ஈன்றிட்ட அன்னையருள் நாடிவந்தோம் !
சிங்காரச் செம்முலைகள் தீமைகளை ஒழித்தெமக்கு
செல்வங்கள் தந்திடுமே ! சிவபதமும் சேர்த்திடுமே !
மங்காதப் புகழ்தருமே ! மாளாத நிலைதருமே !
மனக்குறைகள் நீக்கிடுமே ! மாரியாளுன் அடியவ்வரின்
பங்காகி பசுபதியின் பாகமாகி நின்றிங்கு
பதிசெங்கச் சேரிவந்த பாலாவுன் பயோதரமே. 10

நூற்பயன்

செங்கச் சேரி தேவி மகிழ
துங்கத் தமிழில் தூய பயோதரப்
பத்தினைப் பாடும் பக்தர் களுக்கு
சொத்தும் சுகமும் சுவையா னவாழ்வும்
முன்வினை தீர்ந்து முக்தியும் கிட்டும் !
அன்னை மாரியள் அருள்வாக் கிதுவே.

குடந்தை சா. வேங்கடராமன்.

ஸ்ரீ அம்பாள் அனுக்ரஹத்தை அனுபவ பூர்வமாக அறிந்து கொண்டு ஆஸ்திக அன்பர்கள் அகிலாண்ட நாயகி ஆதி சக்தியை அனுதினமும் ஆராதிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் அன்றாட நிர்ப்பந்தங்களின் காரணமாக இந்த வழிபாட்டை முழுமையான மனத் திருப்தியொடு செய்ய முடியாமல் சிரமப் படுகிறார்கள். ஸப்தஸதீ பாராயணம் செய்ய இயலாவிடில் ஸப்தஸ்லோகியையும், ஸித்த குஞ்சிகா ஸ்தோத்திரத்தையும் பாராயணம் செய்து பயனடையலாம். இவற்றை நாமெல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் பொருள் விளக்கம் செய்திருக்கும் பேராசிரியர் சி.ஜி. வாசுதேவன் அவர்களை உள்ளன்பொடு நமஸ்கரிக்கிறேன். நாம் கர்ம வசத்தால் செய்த அபராதங்களுக்கு அன்னை சக்தியிடம் மன்னிப்பு கேட்பதே ஸ்ரீதேவி அபராதக்ஷமாபனம். ஸ்ரீ சக்தி வழிபாட்டில் ஈடுபட்டுள்ள அன்பர்களுக்கு இந்த புத்தகம் ஒரு அருமையான வாழ்க்கைத்துணை. முக்கியமாக ராகுதசை, அல்லது ராகுபுக்தி நடந்து கொண்டிருப்பவர்களுக்கும், ராகு லக்னத்தில் அல்லது இதர கேந்திர, திரிகோணஸ்தானங்களில் அமையப் பெற்றிருப்பவர்களுக்கும், இது ஒரு வரப்பிரசாதம்.

குடந்தை சா. வேங்கடராமன்